**இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் தேசிய புலமைச் சொத்து நிதியம் - 2013**

---

இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் தேசிய புலமைச் சொத்து நிதியத்தினது 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று மற்றும் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2003 இன் 36 ஆம் இலக்க புலமைச் சொத்து அதிகாரச்சட்டத்தின் 176(6) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிசார் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயபூர்வமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களற்ற கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிசார்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிசார்கூற்றுக்கள் பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிசார்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிசார்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிசார் கூற்றுக்களில் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய புலமைச்சொத்து நிதியத்தின் நிதிநிலமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிசார் நடவடிக்கைகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமையை வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் என்பவற்றுடன் இணங்காமை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாண கோவையின் 880 ஆம் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம், அரசாங்கத்தினது காசு, வருமான முத்திரை, பொருட்கள் என்பவற்றைப் பொறுப்பேற்றல் அல்லது அவற்றிற்குப் பொறுப்பாக இருத்தல், அவ்வாறல்லாதிருப்பின், அரசாங்கத்தினது காசை விநியோகித்தல் அல்லது முத்திரை அல்லது பொருட்களை வழங்குவது சம்பந்தமாக நிர்வாக ரீதியாக பொறுப்பாக உள்ள அல்லது அதிகாரமளிக்கப்பட்டதன் காரணமாக அந்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களும் அரச கணக்கிற்குரிய உறுதிச் சான்றிதழ், சான்றுறுதிப்படுத்தப்பட்ட காசோலைகளில் கையொப்பமிடும் நபர்கள் என்போர் தமது கடமைகளை நேர்மையாக நிறைவேற்றுவதாக 612 ஆம் அத்தியாயமாகிய அரச உத்தியோகத்தர்களுக்கான பிணை வைப்பு அதிகாரச்சட்டத்திற்கு ஏற்ப பிணை வைப்புச் செய்ய வேண்டுமாயினும், அதன் பிரகாரம் நடவடிக்கைகளை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளால் உருவாகிய நிதி விளைவுகள் ரூபா 49,692,263 மிகையாக இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 47,715,331 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மிகை ரூபா 1,976,932 ஆல் அதிகரிப்பிற்காக மீளாய்வாண்டின் செயற்பாட்டு செலவினம் ரூபா 2,185,932 ஆல் குறைவடைந்தமை விசேட காரணமாக அமைந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 வியாபாரக் குறி, பேடன்ட் அனுமதிப் பத்திரம், தொழில்நுட்பத் திட்டப் பதிவு என்பன.

பெறக்கூடியதாகவிருந்த தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டினதும் வியாபாரக்குறி, பேடன்ட் அனுமதிப் பத்திரம், தொழில் நுட்பத் திட்டப் பதிவு தொடர்பான செயலாற்றல் என்பன கீழேயுள்ள புள்ளி விபரக் குறிப்பில் காணப்படுகின்றன.

| | வியாபாரக் குறி பதிவு | | பேடன்ட் அனுமதிப்பத்திரப் பதிவு | | தொழில்நுட்பத் திட்டப் பதிவு | |
|---|---|---|---|---|---|---|
| | 2013 | 2012 | 2013 | 2012 | 2013 | 2012 |
| முன் கொண்டுவரப்பட்ட முன்னைய ஆண்டினது விண்ணப்பங்களது எண்ணிக்கை | 28,720 | 22,538 | 1,525 | 1,287 | 955 | 823 |
| ஆண்டின்போது பெறப்பட்ட விண்ணப்பங்களது எண்ணிக்கை | 8,825 | 9,036 | 516 | 539 | 346 | 394 |
| ஆண்டின்போது பதிவு செய்யப்பட வேண்டிய எண்ணிக்கை | 37,545 | 31,574 | 2,041 | 1,826 | 1,301 | 1,217 |
| ஆண்டின்போது பதிவு செய்த எண்ணிக்கை | 1,485 | 2,854 | 236 | 301 | 130 | 262 |
| பதிவுசெய்யப்படாமல் எதிர்வரும் ஆண்டிற்குக் கொண்டுவரப்பட்ட எண்ணிக்கை | 36,060 | 28,720 | 1,805 | 1,525 | 1,171 | 955 |
| நடைபெற்றவாறுள்ள கோவைகளது எண்ணிக்கை | 16,400 | - | 1,730 | - | 729 | - |
| நடவடிக்கை எடுக்கப்படாத கோவைகளது எண்ணிக்கை | 19,660 | | 75 | | 442 | |
| நடவடிக்கை எடுக்கப்படாத விண்ணப்பங்களது எண்ணிக்கை, சதவீதமாக | 55 | | 04 | | 38 | |

**இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.**

(அ) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகள் மற்றும் தகவல்கள் அடங்கிய அறிக்கைகள் என்பவற்றுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காரணமாக மேற்படி தரவுகள் தொடர்பாகச் சிக்கல்களை ஏற்படுத்துதைத் தவிர்க்க முடியாதுள்ளது.

(ஆ) மேற்படி தகவல்களின் பிரகாரம் வியாபாரக்குறி, பேடன்ட் அனுமதிப்பத்திரம், தொழில் நுட்பத் திட்டப் பதிவு என்பன இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தினது பிரதான பணிகளாகும். எனினும், அவற்றை நிறைவேற்றுவதானது மிக நலிவுற்ற நிலையில் இருந்தது. அதன் காரணமாகப் புத்தாக்குனர்கள் அதைரியத்திற்குள்ளாவாதும் குறிப்பிட்ட காலத்தில் பதிவைப் பெற முடியாமையால் புத்தாக்குனர்களது நிர்மாணங்களின் மூலம் பொருளாதாரத்திற்குக் குறிப்பிடத்தக்க உதவி பெறப்படாது போயிருந்தது. சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களைப் துரிதமாகப் பதிவு செய்வதற்கு 2013 மே மாதம் தொடக்கம் விண்ணப்பம் ஒன்றிற்கு துண்டு அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்படும் முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டு அதற்கென ரூபா 305,960 மேலதிக கிரயம் நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தும், வியாபாரக்குறி, தொழில்நுட்பத் திட்டப் பதிவு என்பன தொடர்பாக கணக்காய்வில் திருப்தியடைய முடியவில்லை.

## 4.2. முகாமைத்துவ வினைத்திறமையின்மை

வருடாந்த செயல் திட்டத்தின் பிரகாரம், 3 புலமைச் சொத்து வசதிகள் வழங்கல் நிலையங்களை நிறுவுவதற்கு ரூபா 05 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும், 2013 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அந்த இலக்கை அடையப் பெற்றிருக்கவில்லை.

## 4.3 முறைப்படி சுவீகரிக்கப்படாத காணிகளில் கட்டிடங்களை நிர்மாணித்தல்

தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்கான பாதுகாப்பறை ஒன்றையும் விற்பனை மேம்பாட்டு நிலையம் ஒன்றையும் நிர்மாணிப்பதற்கென 2008,2009 ஆம் ஆண்டுகளில் ரூபா 22,978,101 செலவிடப்பட்டிருந்தது. குறித்த காணியினது உரித்து மற்றும் அக்காணியுள்ளமையை உறுதி செய்யாது நிர்மாணிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டதால் அவற்றைத் உடைத்து அகற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்ட இக் கட்டிடத்திற்கான மேற்கொள்ளப்பட்ட செலவினம் பயனற்றதாகியிருந்தது

## 4.4 சர்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டின்போது வெளிநாட்டுப் பயிற்சிகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூபா 800,000 தொகைகளில் ரூபா 360,000 நிறுவனத்திற்குப் புறம்பான 10 உத்தியோகத்தர்களுக்காக வெளிநாட்டுப் பயிற்சிக்காகச் செலவிடப்பட்டிருந்தது.

## 4.5 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) புலமைச் சொத்துப் பணிப்பாளர் நாயகப் பதவி ஓராண்டிற்கு மேலாக வெற்றிடமாக இருந்தது. எனினும், அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காது பதில் கடமையில் பெண் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் பிரதிப் பணிப்பாளர் பதவிகள் மற்றும் உதவிப் பணிப்பாளார் பதவி என்பன முறையே 4 ½ ஆண்டுகளாகவும் 2 ½ ஆண்டுகளாகவும் வெற்றிடமாக இருந்தன.

(ஆ) புலமைச் சொத்துத் தொழில்நுட்ப உதவியாளர், புலமைச் சொத்து ஆராய்ச்சி உதவியாளர், பதிவேடுகள் மற்றும் தரவுகள் உதவியாளர், புலமைச் சொத்து உத்தியோகத்தர் போன்ற 12 பதவிகளும் 06 அரச முகாமைத்துவ உதவியாளர் பதவிகளும் 2014 மே 31 ஆந் திகதியளவிலும் 2 ஆண்டுகளுக்கு மேலாக வெற்றிடமாக இருந்தன.

## 5. கணக்களி தகைமையும் நல்லாளுகையும்

## 5.1 உள்ளகக் கணக்காய்வு

2009 ஜுன் 09 ஆந் திகதிய டிஎம்/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிய நடவடிக்கைகள் தொடர்பாக போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானம் என்பவற்றுக்கிடையே 17 சதவீதம் முதல் 120 சதவீதம் வரையிலான வேறுபாடுகளும் வரவு, பாதிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளவாறான செலவினம் என்பவற்றுக்கிடையே 60 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான குறிப்பிடத்தக்க வேறுபாடுகளும் நிலவியதன் காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது புலமைச் சொத்துப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வியாபாரக்குறி, பேடன்ட் அனுமதிப்பத்திரம், கைத்தொழில் திட்டம் என்பவற்றைப் பதிவு செய்தல்

(இ) மனிதவள முகாமைத்துவம்

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்.